மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை : - **திருமதி. C. கலைவாணி, B.A., L.L.B.,**

மாவட்ட உரிமையி யல் நீதி பதி .

2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவராண்டு 2052 பிலவ வருடம் புரட்டாசித் திங்கள் 07 ஆம் நாள்

**இடைநிலை மனு எண்.102/2021-ல்**

**அசல் வழக்கு எண். 125/2016**

சாந்தி ...மனுதாரர்/ பிரதிவாதி

**// எதிர்//**

ராஜேஸ்வரி ... எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனு 15.09.2021 தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. RS. ஜெயசங்கர், திரு. V.K. கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. S. விஜயன், திரு. R. கண்ணதாசன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கில் 08.04.2019 ம் தேதியன்று PW1-ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் முடிக்கப்பட்டதை ரத்து செய்து பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக போடப்பட்டுள்ள அசல் வழக்கை மறு திறப்பு செய்து உத்தரவிடுமாறு பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. மனுவின் சுருக்கம் :-

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. அசல் வழக்கானது பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு, வா.சா.1 ஆக விசாரணை செய்த வாதியை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படாமல் 08.04.2019 ம் தேதியன்று முடிக்கப்பட்டு பிறகு அசல் வழக்கு வாதி தரப்பு விசாரணை முடிக்கப்பட்டுவிட்டது. மேற்படி தவறானது வேண்டுமென்றா, அலட்சியமாகவோ ஏற்பட்டதல்ல. வாதியை வா.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் அசல் வழக்கு விசாரணை தொடரும்பட்சத்தில் அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பு நியாயங்களைஎடுத்துரைக்க போதுமான சூழல் இயலாத நிலை ஏற்படும். எனவே, வா.சா.1-ஐ விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டுள்ளதாக ஏற்பட்டுள்ள உத்தரவை நீக்கரவு செய்து அசல் வழக்கினை மறுதிறப்பு செய்யக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவைகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மனுதாரர் தரப்பில் அசல் வழக்கை காலதாமப்படுத்தும் நோக்கிலும், வழக்கினை இழுத்தடித்து எதிர்மனுதாரர்/வாதிக்கு கஷ்டநஷ்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் பலமுறை வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்யாமல் வழக்கினை இழுத்தடித்துவிட்டு, பிரதிவாதி தரப்பு

சாட்சிக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் விசாரணை செய்ய, எவ்வித முயற்சியும் எடுக்காத மனுதாரர் அசல் வழக்கில் பாதகமான சூழ்நிலைகள் உள்ள காரணத்தினால், வழக்கின் தன்மையை திசை திருப்பும் நோக்கில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் விடுப்பட்ட இடங்களை பூர்த்தி செய்வதற்காகவும், எதிர்மனுதாரருக்கு ஏதேனும் ஓர் பாதிப்பினை ஏற்படுத்தவேண்டும் என்ற வகையிலும் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், அசல் வழக்கானது பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு, வா.சா.1 ஆக விசாரணை செய்த வாதியை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படாமல் 08.04.2019 ம் தேதியன்று முடிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி தவறானது வேண்டுமென்றா, அலட்சியமாகவோ ஏற்பட்டதல்ல என்றும், வாதியை குறுக்கு விசாரணை செய்யாமல் அசல் வழக்கு விசாரணை தொடரும்பட்சத்தில் அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பு நியாயங்களைஎடுத்துரைக்க போதுமான சூழல் இயலாத நிலை ஏற்படும் என்றும், எனவே, வா.சா.1-ஐ விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டுள்ளதாக ஏற்பட்டுள்ள உத்தரவை நீக்கரவு செய்து அசல் வழக்கினை மறுதிறப்பு செய்ய உத்தரவிடவேண்டும் என்று வாதிட்டார்.

**5.** எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர் தரப்பில் அசல் வழக்கை காலதாமப்படுத்தும் நோக்கிலும், வழக்கினை இழுத்தடித்து எதிர்மனுதாரர்/வாதிக்கு கஷ்டநஷ்டத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் பலமுறை வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்யாமல் வழக்கினை இழுத்தடித்துவிட்டு

வேண்டுமென்றே விட்டுவிட்டு, பிரதிவாதி தரப்பு சாட்சிக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் விசாரணை செய்யவேண்டும் என்று இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

**6. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

**பிரச்சனை :-**

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** அசல் வழக்கானது பிரதிவாதி தாவா சொத்தினை வாதி வசம் ஒப்படைக்க உத்தரவு வழங்கியும், அவ்வாறு ஒப்படைக்காத பட்சத்தில் சமூகம் நீதிமன்றமே தாவா சொத்துக்களை பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு வசம் எடுத்து தர உத்தரவு வழங்குமாறு தாக்கல் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா போடப்பட்டு பிரதிவாதி முன்னிலையாகாததால், பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை மற்றும் வாதி தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக போடப்பட்டிருந்த நிலையில், இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவினை பரிசீலிக்கையில், அசல் வழக்கானது பிரதிவாதி சுவாதீனப்பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, வாதியின் குறுக்கு விசாரணை

முடிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு விசாரணை செய்யப் போடப்பட்டுள்ள நிலையில், வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-ஐ விசாரணை செய்யவேண்டும் என்று இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ள விபரம் தெரியவருகிறது. எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆட்சேபணையையும் இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது. எனவே, அசல் வழக்கை மறுதிறப்பு செய்து வா.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்வது அவசியம் என்பதாலும், மனுதாரர்/வாதிக்கு ஒரு வாய்ப்பு வழங்கி இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித இழப்பும் ஏற்படப்போவதில்லை என்பதாலும், இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவில்,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று ( 23.09.2021) அவையறியப்பகரப்பட்டது.

( S/d. C. Kalaivani.,)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**:-

**இரு தரப்பிலும்** : இல்லை

( S/d. C. Kalaivani.,)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.